**விடுதி நுழைவாயில் புனரமைப்பிற்காக ரூபா மூன்று இலட்சம் அன்பளிப்பு**

அண்மையில் பாடசாலைக்கு வருகைதந்த சுவிஸ் நாட்டில் வசிக்கும் எமது கல்லூரியின் பழைய மாணவனும் எனது வகுப்புத் தோழனுமான **கலைஞர் செல்வரத்தினம் தேவசீலன்** அவர்கள் விடுதி நுழைவாயில் புனரமைப்பு மேம்பாட்டிற்காக ரூபா மூன்று இலட்சம் (Rs. 300, 000) அன்பளிப்புச் செய்துள்ளார். இவர் சரவணை உறவுப்பாலம் அமைப்பின் நிர்வாக உறுப்பினர்களில் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.



**ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது**
**ஊதியம் இல்லை உயிர்க்கு**

என்ற குறள் வரிகளுக்கமைய வாழும் எனதன்பு நண்பனைச் சங்கத்தின் சார்பிலும் கல்லூரி நிர்வாகத்தின் சார்பிலும் பாராட்டி மகிழ்கின்றேன்.

சி. இளஞ்செழியன் (தலைவர்)
வேலணை மத்திய கல்லூரிப் பழைய மாணவர் சங்கம் -கனடா